# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு

## பெறுகைக் கைந்நூலுக்கான
## பிற்சேர்ப்பு - 13

வெளியிடப்பட்ட திகதி – 2007-10-03

**(பண்டங்களும் கட்டுமான வேலைகளும் - 2006 பெறுகை வழிகாட்டு நெறிகளுடன் பயன் படுத்துதல் வேண்டும்.)**

பெறுகை வழிகாட்டு நெறிக் குறிப்பீடு: 1.5 ஆம்

**பிரிவுகளை இப்பிற்சேர்ப்பு மேலோங்கி நிற்கும்.**

**பெறுகைச் செயற்பாடுகளுக்கு ஏற்புடையனவான சட்டங்கள்**

# தேசியப் பெறுகை முகவர் நிலையம்

| | | |
|---|---|---|
| **பெறுகை வழிகாட்டி குறிப்பு 1.5<br>பெறுகை செயற்பாடுகளுக்கு ஏற்புடையனவான சட்டங்கள்** | | |
| ரூபா 5 மில்லியனுக்கு மேலதிகமான ஒவ்வொரு அரச ஒப்பந்தத்திற்கும் 1987 ஆம் ஆண்டின் அரச ஒப்பந்தங்களின் சட்ட இலக்கம் 3 இன் பின்வரும் பிரிவுகளுக்கு பெறுகை ஏற்பாடுகளில் ஈடுபாடுள்ள அனைத்து அலுவலர்களின் விஷேட கவனத்தைக் கோரப்படுகின்றது. | | |
| | | (ஆ) முறைப்படி சத்தியஞ் செய்யப்பட்ட சத்தியக் கடதாசி ஒன்றுடன் சோத்து இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப் பட்டவாறான அத்தகைய விபரங்களைக் கொடுத்துதவுமாறு (அ) என்னும் பந்தியில் (i) ஆல் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளைத் தேவைப்படுத்துதல்: |
| | | (இ) பந்தி(ஆ) என்பதன் கீழ் கொடுத்துதவப்பட்ட விபரங்களை உள்ளடக்க வேண்டிய ஓர் இடாப்பை அல்லது பல இடாப்புகளைப் பேணுதல்: |
| | | (ஈ) பந்தி(அ) என்பதன் (i) ஆம் உட்பந்தியின் கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆளை –<br><br>(i) இச்சட்டத்தையும் அதன் கீழ் ஆக்கப்படும் ஒழுங்கு விதிகளையும் தகுந்தவாறு வழக்கிடுவதற்கும் நிருவகிப்பதற்கும் அவசியமானவையென பதிவாளர் கருதுகின்றவாறான அத்ததைய புத்தகங்களையும் பதிவேடுகளையும் பேணுமாறும்: அத்துடன்<br><br>(ii) அதாவது நிதி நிலைமை தொடர்பிலும், அத்துடன் உத்தேசிக்கப்பட்ட பகிரங்க ஒப்பந்தத்தின் தன்மை தொடர்பிலும் பதிவாளர் அவசியமானவையெனக் கருதக் கூடியவாறான அத்தகைய வேறு கருமங்கள் தொடர்பிலும விவரத் திரட்டுக்களைப் பதிவாளரிடம் கோப்பிடுமாறும் தேவைப்படுத்துதல். |
| | (2) | பதிவாளர் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் அவரால் பேணப்படும் இடாப்புகளுக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லாத் திருத்தங்களையும் சேர்ப்புக்களையும் அல்லது மாற்றங்களையும் காலத்துக்குக் காலம் செய்தல் வேண்டும். |
| இடாப்பு சான்றாயிருத்தல் | 7. | பதிவாளர் பேணப்படும் இடாப்பில் பதிக்கப்படும் விபரங்கள், அதன்கண் உட்புகுத்தப்படுவதற்கென இச்சட்டத்தால் பணிக்கப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவையேனும் கருமங்களுக்கு முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | **பாகம் II – பதிவு செய்தல்** |
| பதிவாளரிடம் பதிவு செய்யுமாறு தேவைப் படுத்தப்பட்ட ஆட்கள் | 8. (i) | எவரேனும் கேள்விதாரருக்காக அல்லது அவர் சார்பில் ஒரு முகவராக அல்லது துணை முகவராக பிரதிநிதியாக அல்லது நியமித்தராகச் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள் 10 ஆம் பிரிவிற்கிணக்கத் தம்மையும் அத்தகைய பகிரங்க ஒப்பந்தத்தையும் பதிவு செய்தல் வேண்டும் என்பதுடன், 6ஆம் பிரிவின் கீழ் கொடுத்துதவ வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட விபரங்களைப் பதிவாளர்களுக்குக் கொடுத்துதவுதல் வேண்டும். |
| **1987 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பகிரங்க ஒப்பந்தங்களின் சட்டம்** | | |
| | (2) | எவரேனும் ஆள் கேள்விதாரரொருவரின் ஒரு முகவராக துணை முகவராக பிரதிநிதியாக அல்லது நியாத்தராக உள்ளவிடத்து அவர் இப்பிரிவின் கீழ் தம்மையும் பகிரங்க ஒப்பந்தத்தையும் பதிவு செய்யும் முன்னர் ஒரு முகவராக துணை முகவராக பிரதிநிதியாக அல்லது நியமத்தராகத் தாம் நியமிக்கப்பபடடமை பற்றிய சான்றிதழொன்றை முதலில் பதிவாளருக்குக் காண்பித்தல் வேண்டும் |
| 8ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் மீறுகை தவறொன்றாதல் | 9.(1) | எட்டாம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றிற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஒவ்வோராகும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு லட்சம் ரூபாக் குற்றப் பணம் ஒன்றிற்கும் அத்துடன் இரண்டு ஆண்டுகளை மிஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டணைக்கும் ஆளாதலும் வேண்டும். |
| | | சட்டத்தின் கீழ் செல்லுபடியாயுள்ளவொரு பதிவுச் சான்றிதழை முதலில் காண்பிக்காமல் பகிரங்க ஒப்பந்தமொன்று தொடர்பாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செயல் தொடர்பு எதுவும் கொள்ளுதல் ஆகாது என்பதுடன் அத்தகைய ஆள் செயல் தொடர்பு எதனையும் கொண்டிருப்பின் அல்லது எவையேனும் செயல் தொடர்புகளைக் கொண்டிருக்க எத்தனிப்பாராயின் அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் அதற்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் ஒரு லட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஒப்பந்தக்காரர்களுடனும் முகவர்ககளுடனும் செயல் தொடர்பு கொள்ளுவதிலிருந்து உறுப்பினர்களும் தடை செய்யப்படுதல் | 12. | பகிரங்க குழுவொன்றின் அல்லது அத்தகைய குழுவின் தொழில் நுட்பக் குழுவொன்றின் கேள்விப் பத்திரச் சபையொன்றின் அல்லது மதிப்பீட்டுச் சபையொன்றின் எவரேனும் உறுப்பினர் அல்லது அதன் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் அல்லது எவரேனும் அரச அலுவலர் அல்லது பதிவாளர் பதிவுசெய்யும் நோக்கத்திற்காக அன்றியும் 8 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் ஆட்கள் இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியான சான்றிதளொன்றை முதலில் காண்பித்தாலன்றியும் எதேனும் பகிரங்க ஒப்பந்தத்தில் எழுகின்ற அல்லது அது தொடர்பிலான எதேனும் கருமம் தொடர்பாக 8 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யபபடும் எவரேனும் ஆளுடன் செயல் தொடர்பு எதுவும் கொள்ளுதல் ஆகாது. இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும். |